UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நாலடியார் எடுத்துரைக்கும் மக்கள் சமுதாயம்

**கு. நளினி**
உதவிப்பேராசிரியர்
கற்பக விநாயகா பொறியியல்
மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
செங்கல்பட்டு மாவட்டம்

**ஆய்வுச்சுருக்கம்**

நீதி நூல்கள் பல தமிழில் காலந்தோறும் தோன்றியுள்ளன. தமிழில் நீதியை உணர்த்துமாறு அகப்புறத் திணை இலக்கியங்களிலேயே அடிப்படைக் கூறுகள் அமைந்துள்ளன. அவற்றில் சில துறைகள் நீதி இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டன. “திருக்குறள்” அக்காலத்துப் பெருநூலாக உலகிற்கு வழங்கி வந்தது. இடைக் காலத்தும் தற்காலத்தும் அறநூல்கள் இடைவிடாது உருவாகி வருதல் குறிப்பிடத்தக்கது. தமிழில் நீதி இலக்கிய வகை தனக்கென்று ஒரு தனிவளர்ச்சியும், இயல்பும், நோக்கமும் உடையதாகும். புதினெண் கீழ்க்கணக்கிலுள்ள நீதி நூல்கள் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சி நிலையாகும். தமிழில் சங்கக் காலத்துக்குப் பின் வந்த இதனை ‘நீதி நூற்காலம்’ என்றே குறிப்பிடுவர். திருக்குறளுக்கு அடுத்து. ‘நாலடியாரும்’ உடன் வைத்து எண்ணப்படும் சிறப்புடையது. நாலடியார் அறம், பொருள், இன்பம் என முப்பாலாக வகுத்து நீதிகளை புகட்டி இருக்கின்றது. பல அறங்களை எடுத்துக் கூறினாலும் ஒரு சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும், மற்றவர்களிடம் நட்பு பாராட்டும் விதம் குறித்தும், பொருட்பாலில் எடுத்துயம்புகிறது. இவ்வாய்வுக் கட்டுரை நாலடியார் எடுத்துரைக்கும் மக்கள் சமுதாயத்தைப் பற்றி விளக்குகிறது.

**முன்னுரை**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மக்களின் வாழ்வை வளப்படுத்துவன. அறம். பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்களை குறைந்த அடிகளில் நிறைந்த பொருளை எடுத்துரைப்பன. கணக்கு என்பது நூல் என்றும் கீழ் என்பது பாடலின் குறுகிய அளவையும் குறிப்பதாகும். இவற்றை அகம், புறம், அறம் என மூன்றாக பகுத்துள்ளனர். இளமையும் அழகும்; செல்வமும் செல்வாக்கும்; பொன்னும் பொருளும் நிலையற்றது கல்வி ஒன்றே நிலையானது என்பது இந்நூல்கள் வலியுறுத்துவன. இவை சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களின் தொகுப்பாகும். இதில் பெரும்பாலானவை நீதி நூல்களாகும். சில காதலையும் போரையும் மையமாகக் கொண்டுள்ளன. கீழ்க்கணக்கு நூல்கள் செறிவும் நுட்ப திட்பமும் கொண்டு வாழ்வு நெறிக் காட்டுவன. மக்கள் துன்பமின்றி வாழ்ந்து சிறக்க வேண்டும் என்பதே இவற்றின் நோக்கம். இதில் அற நூல்களுள் ஒன்றான நாலடியார் நாலடி வெண்பாக்களால் ஆன நூல். திருக்குறளுக்கு இணையாக வைத்து எண்ணப்படுவது. ‘நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’, ‘பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்’ என்னும் பழமொழிகளால் அறியப்படுகின்றன. நாலடியார் கூறும் மக்கள் சமுதாயத்தைப் பற்றி எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாலடியார் அறிமுகம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும். இது

நானூறு பாடல்களை கொண்டமையால் ‘நாலடி நானூறு’ என்ற பெயரும் உடையது. அறம் கூறும் நூலான திருக்குறளைத் தழுவி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. நீதி நூலேயாயினும் இலக்கியச் சுவையும் செறிவும் கொண்டது. வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கொண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது. அறத்துப் பால் பதின்மூன்று அதிகாரங்களையும், பொருட்பால் இருபத்து ஆறு அதிகாரங்க ளையும், காமத்துப்பால் ஓர் அதிகாரத்தை யும் எடுத்தியம்புகிறது. இதனை தொகுத்து அதிகாரம் வகுத்தவர் பதுமர். திருக்குறள் அறத்துப்பாலில் வாழ்க்கைத் தொடர்பான கருத்துக்களைக் கூற நாலடியார் செல்வம் நிலையாமை. இளமைநிலையாமை, யாக்கை நிலையாமை பற்றி விளக்குகிறது. பொருட் பாலில் கல்வி, குடிப்பிறப்பு, நல்லினஞ் சேர்தல், சுற்றந்தழால், நட்பின் பாகுபாடுகள் முதலியன கூறப்பட்டுள்ளன. காமத்துப் பாலில் விளக்கங்கள் குறைவாகக் கூறப் பட்டுள்ளன. இதில் பொருட்பாலில் கூறப் பட்டுள்ள மக்களின் நிலைக் குறித்துக் காண்போம்.

**நாலடியார் கூறும் மக்கள்**

நற்குடியில் பிறப்பவர்களின் இயல்புகளாக குடிப்பிறப்பு, மேன்மக்கள் என்னும் அதிகாரங்களினால் அறிய முடிகிறது. நல்ல குடியில் பிறந்தவர்கள் கொடிய வறுமைக்கு ஆளாகி உடல்நலம் கெட்டுப் போனாலும் தம் கடமைகளில் இருந்து சிறிதும் விலக மாட்டார்கள் என்பதை வேட்டைக்குச் செல்ல முடியாத சிங்கம் ஒருபோதும் படர்ந்திருக்கும் புல்லைத் தின்பதில்லை, “இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா கொடிப்புல் கறிக்குமோ மற்று”[1] என்று உவமிக்கின்றது. இதனை, ‘சலம் பற்றிச் சார்பில் செய்யாமா சற்ற குலம்பற்றி வாழ்துமென் பார்’ (குறள் 956) என்று திருக்குறள் எடுத்துரைக்கிறது. நன்மை, தீமைகளை அறிந்து நடக்கும் நற்குடியில் பிறப்பு ஒருவருக்கு கிடைக்கு மானால் அதனால் அடையும் பயன் கிட்டும் என்பதை, “உணருங் குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ புணரும் ஒருவர்க் கெனின்”[2] என்னும் பாடலால் அறியப் படுகின்றன. மிக உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் பெருந்தன்மை, மென்மை, ஒழுக்கம் என்னும் இம்மூன்று குணங்களும் பெற்றிருப்பர். பெருஞ்செல்வமே பெற்றிருந் தாலும், தாழ்ந்த குடியில் பிறந்தவர்கள் இம்மூன்று தன்மைகளுடன் விளங்கமாட்டார் கள் என்பதை, “மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம் எய்தியக் கண்ணும் பிறர்க்கு”[3] என்பதால் அறியப்படுகிறது. இதனை ‘ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார்’ (குறள்952) என்ற திருக்குறள் வழி அறியப்படுகிறது.

நல்ல இனத்தாரோடு நட்புக் கொள்வதும், இனியச் சொற்களைக் கூறுதலும், இல்லை என்று வருவோர்க்கு உதவுதலும் மற்றும் மனத்தில் குற்றமின்மையும் ஆகிய நல்ல பண்புகள் உயர்குடியில் பிறந்தவர் இடத்தில் மட்டுமே அமையும் என்பதை “முத்தோ புமைக்கும் முழங்குஉவரித் தண்சேர்ப்ப இற்பிறந்தார் கண்ணே யுள”[4] என்பதால் விளங்குகிறது. இதனை, ‘நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகைஎன்ப வாய்மைக் குடிக்கு’ (953) என்ற குறள் விளக்குகிறது. “குன்றா ஒழுக்கமாகக் கொண்டார் கயவரோ டொன்றா உணரற்பாற் றன்று”[5] பெரியவர்களைக் காணும் போது இருக்கையில் இருந்து எழுந்து நின்று வரவேற்றலும் அவர்கள் திரும்பிச் செல்லும் போது உடன் இருந்து வழி அனுப்புவதும் போன்ற செயல்களால் நற்குடியில் பிறந்தவர் களை எப்போதும் கீழ்மக்களோடு ஒப்பிட்டு நோக்குதல் ஆகாது என்று அறிய முடிகிறது. ஒரு ஆற்றின் நீர் முழுமையாக வற்றி வறண்டு போனாலும் ஆற்றைத் தோண்டி னால் தெளிந்த நீர் சுரக்கும். அது போல நற்குடியில் பிறந்தவர் ‘இல்லை’ என்று வந்தவர்க்கு ‘இல்லை’ என்று கூறாமல் உதவி செய்து அவர்கள் வறுமைக்கு ஊன்றுகோல் போல இருப்பார்கள் என்பதை, “அற்றக்கடைத்தும் அகல்யா றகழ்தக்கால் தெற்றெனத் தெண்ணீர் படும்”[6] எடுத்துரைக்கிறது.

குற்றமற்ற அறிவுடைய மக்கள் பிறர் பொருளைக் களவு செய்யமாட்டார்கள், கள் உண்ண மாட்டார்கள், உயர்ந்தோரால் விலக்கப்படுவதைத் தாமும் விலக்குவார்கள், பிறரை இகழ்ந்து பேச மாட்டார்கள். வாய் தவறியும் பொய் கூற மாட்டார்கள், தீவினை காரணத்தால் தமக்கு துன்பம் வந்தாலும் அதற்காக வருந்த மாட்டார்கள் என்பதை, “வாயின்பொய் கூறார் வடுவறு காட்சியார் சாயின் பரிவ திலர்”[7] என்னும் வரிகள் இயம்புகின்றன. பிறருடைய மறைவான செய்திகளை கேட்பதில் செவிடாகவும், மற்றவர் மனையாளைக் காண்பதில் குருடாக வும், துன்பம் தரும் புறங்கூறுதலில் ஊமையாகவும் இருக்க வேண்டும். அத்துடன் எதையும் ஆராய்ந்து செல்பவனு க்கு எந்த ஒரு நல்ல நெறியையும் எவரும் கூற வேண்டியதில்லை என்று “புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல்யாதும் அறம்கூற வேண்டா அவற்கு”[8] விளக்குகிறது. ‘இவர்

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

பொருள் உடையவர் என்று' ஒருவரிடம் பழகித் திரிந்து உயிர் வாழ்வர் கீழ்மக்கள். ஆனால் உயர்ந்த குடியில் பிறந்தவர் உறவு கிடைத்தால் போதும் அவரிடம் உள்ள பொன்னும் பொருளும் கிடைத்ததற்கு சமம் என்று எண்ணி மகிழ்ச்சியடைவர் மேன் மக்கள் என்பதை, "பிலம்தலைப் பட்டது போலாதே நல்ல குலம்தலைப் பட்ட இடத்து"[9] விளக்குகிறது.

### நாலடியார் கூறும் மக்களின் நட்பு

யானையைப் போன்றவர் நட்பைக் கொள்ளாமல் நாய் போன்றவர் நட்பினைக் கொள்ள வேண்டும். ஏனெனில் பலகாலம் பழகித் தன்னைப் பேணிக்காத்த பாகனையே யானைக் கொன்று விடும். ஆனால் தன்னை வளர்த்தவன் எறிந்த வேல் தன் உடலில் பட்டு நிற்கும் போதும் நாய் தன் வாலை குழைத்து நிற்பதை "அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்"[10] அறிய முடிகிறது. தெளிந்த அறிவில்லாதவரிடம் நட்புக் கொள்வதை விட அவரிடம் விலகி நிற்பது நல்லது. அது நம்மை பின் தொடரும் துன்பத்தை போன்றது. ஒருவரிடத் தில் இல்லாத புகழை இருப்பதாக கூறுவது என்பது அவரை புகழ்வதோடு இகழ்வது சிறந்தது என்பதை, "இகழ்தலின் கோறல் இனிதே மற் றில்ல புகழ்தலின் வைதலே நன்று"[11] விளக்குகிறது. பாம்பு போன்று இருப்பவரிடம் நட்புக் கொண்டு பின்னர் பிரிந்து சென்று துன்பப்படுவதை விட பலரோடு பலநாள் பழகி அவர் இயல்பை தன் இயல்போடு ஒப்பிட்டு ஆராய்ந்து பொன்னைப் போல் போற்றி நட்புக் கொள்வதே சிறந்ததாகும், "பரீஇ உயிர் செகுக்கும் பாம்பொடும் இன்னா மரீஇஇப் பின்னைப் பிரிவு"[12] உணர முடிகிறது. மேன்மக்களானவர் தாம் செல்லும் வழியில் ஒருவரை ஒருநாள் கண்டு பழகினாலும் அவரை நெடுநாள் பழகிய நட்புடையவர் போல நட்புச் செய்து தம்முடன் இணைத்துக் கொள்வர். அதுவன்றி, சில நாட்கள் பழகி அதன்பிறகு நட்புக் கொள்வது உயர்ந்தோர் நட்பு ஆகாது என்பதை, "நல்வரை நாட சிலநாள் அடிப்படின் கல்வரையும் உண்டாம் நெறி"[13] விளக்குகிறது. இதனை, 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' (785) என்னும் குறள் வழி அறிய முடிகிறது.

நட்புக் கொள்ளும் தன்மையால் கடைப் பண்பு கொண்டவர் பாக்கு மரத்திற்கு ஒப்பாவார். இடைப்பட்டவர் தென்னை மரத்திற்கு ஒப்பாவார். துலைமைப் பண்பு கொண்டவர்கள் பழைமையான நல்ல குடியினர் நட்பு போன்றதனால் பயனுடைய பனைமரத்தின் இயல்பு போன்ற நட்பாகும், "எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே தொன்மை உடையர் தொடர்பு"[14] விளக்குகிறது.

### முடிவுரை

நாலடியார் செல்வம் மற்றும் வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துக் கூறுவதோடு துறவறம், இல்லறம், கல்வி, நட்பு, சான்றோர் இயல்பு போன்று பல்வேறு அறக் கருத்துக்களை எடுத்துரைக்கிறது. உள்ளத் தூய்மை தரும் கல்வியை நிலை நிறுத்துவதோடு தனி மனிதனின் உயர்வுக் கும், சமூகத்தின் நல்லாட்சிக்கும் வழி காட்டும் கருத்துக்களையும் எடுத்து இயம்பு கிறது. உண்மையான நட்பின் இலக்கணத் தையும் மற்றும் சான்றோர்களின் தன்மைக ளையும் பற்றி விளக்குகிறது. சமூக மேம்பாட்டிற்கும், தனி மனிதன் அறநெறி தவறாமல் நடந்தால் சமுதாயத்தில் காணும் சிக்கல்களை எதிர்கொண்டு நல்வாழ்வு பெற முடியும் என்ற கருத்தையும் வலியுறுத்து கிறது. ஒரு தனிமனிதனாக இருந்தாலும், ஒரு சமுதாயமாக இருந்தாலும் நற்குடியில் பிறத்தலுக்குரிய பண்புகளை பெற்று மேன்மக்களாக திகழ வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. நாலடியார் கூறும் அறங்களைப் பின்பற்றி இன்றைய சமுதாயம் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் முடிவாகும்.

### அடிக்குறிப்பு

1. செய்யுள் 141 (நாலடியார்)
2. செய்யுள் 144 (நாலடியார்)
3. செய்யுள் 142 (நாலடியார்)
4. செய்யுள் 146 (நாலடியார்)
5. செய்யுள் 143 (நாலடியார்)
6. செய்யுள் 150 (நாலடியார்)
7. செய்யுள் 157 (நாலடியார்)
8. செய்யுள் 158 (நாலடியார்)
9. செய்யுள் 160 (நாலடியார்)
10. செய்யுள் 213 (நாலடியார்)
11. செய்யுள் 219 (நாலடியார்)
12. செய்யுள் 220 (நாலடியார்)
13. செய்யுள் 154 (நாலடியார்)
14. செய்யுள் 216 (நாலடியார்)

### துணைநின்ற நூல்கள்


- நாலடியார், முதுமுனைவர். இரா.இளங் குமரனார், நிலவன் பதிப்பகம், சென்னை -17.
- தமிழண்ணல்-இலக்கிய வரலாறு மீனாட்சி புத்தக நிலையம்.
- திருக்குறள் – கற்பகவிநாயகர் பதிப்பகம், சிவகாசி.